# “பெரியாரின் நெறிவாழும் பேரனே வருக! பெருவெற்றி பெறப்போகும் தீரனே வருக!”

ஏழாவது முறையும்
எழிலாட்சி நடத்தி
இணையற்ற சாதனைகள்
இயற்றப் போகும் நம்
ஏரார்ந்த முதலமைச்சர்
ஏழுநாள் பயணத்தை
இனிதே முடித்து
எட்டாத உயரங்கள்
எட்டிப் பிடித்து
ஏராள முதலீடு
ஏற்றுக் களித்து

'இவரன்றோ தமிழ்நாட்டின்
இமயமெனப்' பொலிந்து
இன்று திரும்பினார்
இங்கிலாந்தில் இருந்து!

ஈரோடு காஞ்சி
இசைமேவும் திருவாரூர்ப்
பல்கலைக் கழகங்களில்
பாடு கிடந்து
பாடங்கள் படித்துப்
பகுத்தறிவுப் பட்டங்கள்
பலவும் பெற்ற
பண்பாட்டுப் பெட்டகம்
மாண்புமிகு முதல்வர் அவர்கள்
கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்
மற்றும்
ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின்
அறிவாய்வு அரங்கங்களை
அலங்கரித்து விட்டு,

**'ஆகாயச் சூரியன்
அனல்மாறிக் குளிரடைந்து
அழகிய புன்னகையை
அணிந்த கோலத்தில்
இறங்கி வந்தால்
எவ்வண்ணம் இருக்குமோ'
அவ்வண்ணம் வந்துற்றார்
இன்று!**

**முதலீடுகளை ஈர்க்க
முதல்வராய்ச் சென்றவர்
முத்தமிழ் உலகத்தின்
முதல்வராய்த் திரும்பியிருக்கிறார்!**

அரசுமுறைப் பயணத்தால்
ஆகாயம் கடந்தவர்
ஆகாயப் புகழை
அள்ளிக் கொண்டு
வந்திருக்கிறார்!

தெற்காசிய அரசியலின்
திசைகளைத் தீர்மானித்த
திராவிட இயக்கத்தின்
திருமுகமாய்ச் சென்ற
திராவிட மாடல் நாயகர்

தேசத்தின் பார்வையைத்
திருப்பித் தன்மீது
ஒருமுகமாய்க் குவித்து
ஒளிச்சேர்க்கை பெற்று
உற்சாகமாய் வந்திருக்கிறார்!

தாடிவைத்த பெரியாரின்
தன்மானக் கருத்துகளை
மூடிவைக்க முடியாது என்று
மூதறிஞர் உலகம்
முன்வைத்த முழக்கங்களை

இங்கிலாந்தில் கேட்டு
இதயம் பூரித்துப்
பொங்கிவரும் காவிரியின்
புனல்வேக எழுச்சியுடன்
இன்று திரும்பியுள்ளார்..
எங்கள் மகா தலைவர்!

கண்மூடிப் பழக்கங்கள்
மண்மூடிப் போக
முகமூடி மனிதர்களின்
முற்றுகை தகர்த்து
ஆதிக்கபுரிகளின்
ஆணிவேர் அறுத்து

சமத்துவச் சகாப்தத்தை
சமைத்துக் காட்டிய
'பெரியாரின் பேரன்' எனும்
பெருமிதச் சிகரத்தில்
ஏறி விளையாடி
இளங்கன்றாய் உரையாடி
எம் தலைவர் வந்துள்ளார்!

**'பெரியாரின் நெறிவாழும்
பேரனே வருக!
பெருவெற்றி பெறப்போகும்
தீரனே வருக!' என்று
அவரை
வரவேற்று மகிழ்கிறது
வரலாற்று வானம்!**

ஐம்பதுக்கும் மேற்பட்ட
நாடுகளைக் கொண்ட
ஐரோப்பாக் கண்டத்தில்



இரண்டு நூற்றாண்டுகளில்
ஏற்பட்ட புரட்சியை
இருபதே ஆண்டுகளில்..
இரத்தம் சிந்தாத
யுத்தம் நடத்தி
இங்கண் நிகழ்த்தியவர்
எந்தை பெரியார்!

அவரது திருவுருவப் படத்தை
உலகப் பேரறிவின்
உறைவிடத்தில் திறந்துவைத்து
ஓங்குபுகழ் மாடத்தின்
ஒளிவிளக்காய் ஆகிவிட்டார்
நம் உத்தமத் தலைவர்!

**'வானமும் வையமும்
உள்ளவரை
மானமும் அறிவும்தான்
மனிதற்கு அழகு' என்று
ஞான பாடம் போதித்தவரை,
ஞாலமே ஏத்தும்
ஞான பீடத்தில் நின்று
நாவாரப் போற்றி
உலகத் தமிழர்
உள்ளங்களில் எல்லாம்
நங்கூரமாய் இறங்கியிருக்கிறார்
நம்முடைய முதல்வர்!**

ஈரோட்டுப் பெரியார்
என்னும் திருநாமத்தின்
இயக்கவியல் ஆற்றலை
இங்கிலாந்தில் பதித்துவிட்டு

ஏறு நடையிட்டு
ஏராளக் கண்பட்டு
தாராள முதலீட்டு

ஒப்பந்தம் தாம்பெற்று
சீராளர் தளபதி
செம்மாந்து திரும்பியுள்ளார்!

கருத்தியல் தளங்களைக்
கலக மயமாக்கி
கட்சி மேடைகளைக்
கல்வி மயமாக்கி

ஒடுக்கப் பட்டவர்களை
உணர்வு மயமாக்கி
ஆணவக்காரர்களை
அச்ச மயமாக்கி
கூடிக் கலைந்த
கூட்டத்தை எல்லாம்
கொள்கை மயமாக்கிய
கோளரியாம் பெரியாரை..

'உலக மயம்' ஆக்கிய
உத்வேகத்தோடு
ஒருவார வரம்வாங்கி
உணர்ச்சிப் பிரவாகமாய்
வந்திருக்கிறார்,
கருணை மயமாகிக்
கடமையாற்றும்
நம் முதலமைச்சர்!



டாக்டர்
**எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
மேனாள் ஒன்றிய
இணையமைச்சர்

நம் திராவிட இயக்கம்
சுயமரியாதைச் சுடரில்
பூத்தது!
சாதிப் பாறையைத்
தகர்த்து முளைத்தது!

இந்தி எதிர்ப்புத் தீயில்
முகிழ்த்தது!

ஆரிய மாயையை
அடித்துத் துவைத்தது!

மடமையைக் கொளுத்திய
சாம்பலில் முளைத்தது!
மங்கையர் உரிமையைத்
தூக்கிப் பிடித்தது!

இன்றும்
இனமானம் காக்க
எரிமலையாய் வெடிப்பது!
வள்ளுவப் பறையை
ஓங்கி அடிப்பது!

சமத்துவ வானில்
என்றும் பறப்பது!
சாமான்ய மக்களின்
குரலாய் ஒலிப்பது!

**சுருக்கமாய்ச் சொன்னால்
இது
பெரியாரின் பூமி
பெரியாரின் பூமியென்று
சொல்லிக் கொண்டே
இருப்பது!**

இதைத்தான்
உலகச் செவிகளுக்கு
உரக்கச் சொல்லிவிட்டு
ஒப்பரிய முதல்வராய்
ஒளியுலா முடித்து
செப்பரிய மனிதராய்த்
திரும்பி இருக்கிறார்..நம்
செந்தமிழ் முதல்வர்!

தோட்டா தரணியின்
தூரிகை வரைந்த
உயிரோவியத்தைக்
கோட்டையில் வாழும் நம்
கோப்பெருஞ் சோழர்
திறந்து வைத்துவிட்டு..
தெள்ளுதமிழ் ஊற்றாய்
தென்பொதிகைக் காற்றாய்
பெரியாரின் மாற்றாய்
தேன்புகழ் சுமந்து
திரும்பியிருக்கிறார்!

**'பெரியாரின் நெறிவாழும்
பேரனே வருக!
பெருவெற்றி பெறப்போகும்
தீரனே வருக!' என்று
அவரை
வரவேற்று மகிழ்கிறது
வரலாற்று வானம்!**

### இலண்டனில் இந்திய வம்சாவளி மாணவர்களுடன் கலந்துரையாடி

## திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தி கண்காட்சியைப் பார்வையிட்டேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

இலண்டன், செப்.8–

இலண்டன் கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழக (SOAS) இந்திய வம்சாவளி மாணவர்களுடன் கலந்துரையாடியது குறித்தும், அங்கிருந்த திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தியது குறித்தும், PACT கண்காட்சியைப் பார்வையிட்டது குறித்தும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**இலண்டன் கீழைத்தேயவியல் மற்றும் ஆப்பிரிக்கவியல் பல்கலைக்கழக (SOAS) இந்திய வம்சாவளி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுடன் நமது திராவிட மாடல் ஆட்சி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளைஞர்களின் ஆற்றல் ஆகியவை குறித்த எனது கருத்துகளைப் பகிர்ந்து, மனதுக்கு நெருக்கமான உரையாடலை மேற்கொண்டேன்.**

**பின்னர், அங்கிருந்த திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தி, எக்காலத்துக்குமான தமிழ்ப் பண்பாட்டின் அறிவுக் கருவூலமாகத் திகழும் திருக்குறளைப் போற்றினேன்.**

**இறுதியாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75 ஆண்டுகளையொட்டி, அதன் மக்களாட்சி மரபினையும் தற்காலப் பொருத்தப்பாடினையும் குறித்து நடைபெறும் PACT கண்காட்சியைப் பார்வையிட்டேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





கழக இளைஞர் அணி சார்பில் பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கும் முகாம் மண்டலம் 9இல் தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் திருமங்கலத்தில் நடைபெற்றதில் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், மண்டல பொறுப்பாளர் இன்பா ரகு முன்னிலையில் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் பயிற்சியாளர்கள் இளமாறன், சூரிய கிருஷ்ணமூர்த்தி, நகர் கழகச் செயலாளர் ஸ்ரீதர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விமல், ஒன்றியச் செயலாளர்கள் தனபாண்டியன், ராமமூர்த்தி மதன்குமார், நாகராஜன், பாண்டியன், ஆலம்பட்டி சண்முகம், தனசேகரன் பொதுக்குழு உறுப்பினர் ஆதிமூலம், பேரூர் செயலாளர் வரிசை முகமது, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆதவன், ஜெகதீஷ், சாதிக் சுரேஷ், ஜெகன் ராஜதுரை, காளிதாஸ் உள்ளிட்ட திரளான இளைஞர் அணியினர் பங்கேற்றனர்.

## தி.மு.க. இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாநில செயலாளர் வி.பி.கலைராஜன் அறிக்கை!

சென்னை,செப். 8 -

தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் அது குறித்து ஆலோசித்திடவும் கழக இலக்கிய அணியின் செயல்பாடுகள் குறித்து ஆலோசித்திடவும் ஆலோசனைக் கூட்டம் 13.9.2025 சனிக்கிழமை அன்று மாலை 3 மணிக்கு அன்பகத்தில் நடைபெறுகிறது.

இக் கூட்டத்தில் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

வரும் போது மினிட் புத்தகத்தை கட்டாயம் எடுத்து வர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வி.பி.கலைராஜன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.





தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், குறுக்குச்சாலை அரசு மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன் ஆகியோர் துவக்கி வைத்து மருத்துவ பயனாளிகளுக்கு வழங்கப்படும் சேவை குறித்து பார்வையிட்டார்கள்.நிகழ்வில் ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், தெற்கு ஒன்றிய செயலாளர் இமானுவேல், கோவில்பட்டி மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர். வித்யா விஸ்வநாதன் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர்.சிவக்குமார் இணை இயக்குனர் நல பணிகள் டாக்டர். பிரியதர்ஷினி துணை எப்போதும்வென்றான் சோலைசாமி, உட்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.